بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *14/04/2023* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இறைஞானமிக்க வழிகாட்டல்களின் ஒளியில் لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ என்பதன் இறைஞானமிக்க விளக்கம். உலகின் பொது அமைதி மற்றும் உறுதிப்பாட்டிற்காக துஆக்கள் செய்யுமாறு வலியுறுத்தல்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ என்ற கலிமா ஏகத்துவத்தின் அடிப்படையாகும். ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ என்று கூறினாரோ அவரை நிச்சயமாக அல்லாஹ் நெருப்புக்கு ஹராமாக ஆக்கி விட்டான். எனவே, அல்லாஹுத்தஆலாவின் திருப்தியைப் பெறுவதற்காக அவன்பால் குனிந்தவாறு, தனது கவனத்தை கலப்பற்ற முறையில் அல்லாஹுத் தஆலாவை நோக்கி செலுத்தியவாறு மனிதன் لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ என்று கூறும் போது, அவன் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக ஆகின்றான்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், 'அல்லாஹுத்தஆலா நரக நெருப்பை அவருக்கு ஹராமாக ஆக்கிவிடுகிறான்' என்று கூறியதைப் போன்றே அனைத்து நபிமார்களும் இந்த போதனையைத் தான் கொண்டு வந்தார்கள். ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நானும் முந்தைய நபிமார்களும் கூறிய வார்த்தைகளில் மிக மேன்மை வாய்ந்தது لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَحۡدَہٗ لَا شَرِیۡکَ لَہٗ என்பதாகும். ஆக, இது அனைத்து நபிமார்களின் போதனையாகும். ஆனால், துரதிஷ்டவசமாக இந்த நபிமார்களின் சமுதாயங்களே இந்தப் போதனையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மறந்து விட்டு இணைவைத்தல் எனும் வழியை வகுத்துக் கொண்டார்கள்.

நாம் நற்பாக்கியசாலிகள் ஆவோம். அல்லாஹுத் தஆலா நம்மை ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய சமுதாயத்தில் இணைத்து ஷிர்க்கை முற்றிலும் அழித்துவிட்ட அந்த முழுமையான போதனையை வழங்கியுள்ளான். மேலும், அன்னார் ஏகத்துவத்தின் உண்மையான பாடத்தை வழங்கி நமது இம்மை

மற்றும் மறுமையை சீர்படுத்தி விட்டார்கள். ஆக, தற்போது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மையான போதனையின்படி செயல்பட்டு, கலப்பற்றவராக இறைவனது ஏகத்துவத்தை எவர் ஏற்றுக் கொள்கிறாரோ அவரே அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக ஆவார். மேலும், ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது பரிந்துரையிலிருந்தும் பங்கு பெறுவார்.

அன்னாரது பரிந்துரைக்காக கலப்பற்ற உள்ளத்துடன் لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ வை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதில் உலக ஆதாயம் கலந்திருக்கக் கூடாது. அன்னார் அல்லாஹுத்தஆலாவால் பரிந்துரைக்கான அதிகாரம் வழங்கப்பட்ட இறுதியான மற்றும் முழுமையான நபி ஆவார்கள். மேலும், அன்னாரது பரிந்துரைக்காக அல்லாஹுத்தஆலாவின் கட்டளைக்கு ஏற்ப அன்னார் மீது ஈமான் கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். அல்லாஹுத்தஆலா நமக்கு இக்காலகட்டத்தின் இமாம் மற்றும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது உண்மை அடியாரை ஏற்றுக்கொள்ளும் நல் வாய்ப்பை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு இஸ்லாத்தின் கட்டளைகளை விளக்கமாகவும் அவற்றின் ஆழம் மற்றும் மதிநுட்பத்துடன் நமக்குக் கூறியுள்ளார்கள். அன்னார் எங்கு لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ வின் ஆழத்தைப் பற்றி நமக்கு எடுத்துரைத்துள்ளார்களோ அங்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது அந்தஸ்தைப் பற்றியும் நமக்குக் கூறியுள்ளார்கள். தற்போது நான் இது தொடர்பாக இந்த விஷயத்திற்கு மிக அழகாக ஒளியூட்டும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில மேற்கோள்களை எடுத்துரைப்பேன். நாமும் இந்தக் கருத்துக்களின் ஆழத்தைப் புரிந்தவர்களாக எவ்வாறு நம்மை நாமே ஆராய்ந்து கொள்ள வேண்டும் என்பதன் பால் (அந்த மேற்கோள்கள்) நமக்கும் கவனமூட்டுகின்றன.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அல்லாஹுத்தஆலா தான் கூறிய اَلْيَوْمَ اَكْمَلْتُ என்பதன் விளக்கத்தைத் தானே கூறி விட்டான். இதில் மூன்று அடையாளங்கள் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். முதலாவது اَصْلُهَا ثَابِتٌ அதன் வேர்கள் வலுவாக ஊன்றியுள்ளன. இரண்டாவது அடையாளம் وَّفَرْعُهَا فِى السَّمَآءِ அதன் கிளைகள் விண்ணின் உச்சத்தை அடைந்துள்ளன. மூன்றாவது அடையாளம் تُؤْتِيْٓ اُكُلَهَا كُلَّ حِيْنٍ எந்நேரமும் புத்தம் புதிய பழங்களை வழங்குகிறது.

அன்னார் கூறுகிறார்கள்: இஸ்லாம்தான் இந்தப் படித்தரத்தை முழுவதுமாக அடைந்த மார்க்கமாகும். மேலும், கூறுகிறார்கள்: முதல் அடையாளம் ஈமானின் அடிப்படை கோட்பாடாகும். அதாவது, لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ என்ற கலிமா. இதனைப் பற்றி எந்த அளவுக்கு விரிவாக திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது என்றால், அதன்

அனைத்து ஆதாரங்களையும் சில பாகங்களிலும் கூறி முடிக்க முடியாது. இறைவனது அனைத்து படைப்புகள் மற்றும் உலகின் அமைப்பு இந்த உலகை உருவாக்கியவன், படைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. அதற்காக அவன் ரஹ்மான், ரஹீம், வல்லமை படைத்தவன், ஈடு இணையற்ற தனித்தவன், நிரந்தரமானவன் மற்றும் கற்பனைக்கு எட்டாதவன் ஆகிய பண்புகளைக் கொண்டவனாக இருக்க வேண்டியது அவசியமாகும். ஒட்டு மொத்த முழுமையான பண்புகளின் ஒருமித்த வடிவமாக இருக்க வேண்டும். மேலும், வஹீயை இறக்குபவனாகவும் இருக்க வேண்டும்.

எனவே, لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ என்பது வணக்கத்திற்குரியவன் ஒருவன்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை மட்டுமே உள்ளத்தில் உருவாக்குவதில்லை. அதற்கும் மேற்பட்டு, நமது இறைவன் என்றென்றைக்கும் உள்ளவன் ஆவான்; மேலும், நிரந்தரமாக இருக்கக்கூடியவன் ஆவான் என்ற விஷயத்தையும் உள்ளத்தில் வலுப்படுத்துகின்றது; வலுப்படுத்தவும் வேண்டும். அவன் அனைத்துப் படைப்புகளின் படைப்பாளனாவான். அனைத்துத் தேவைகளுக்கும் அவன் முன்னே குனிய வேண்டும். ஆக, ஈமானின் இந்த நிலை உருவாகிவிடும் போது அது முழுமையான ஈமானாக ஆகிவிடும். அதில் இணைவைத்தலின் கலப்படம் இருக்கவே முடியாது. மேலும், இதுவே ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் “கலப்பற்ற முறையில் لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ மீது ஈமான் கொள்பவர்கள் மீது நரக நெருப்பு ஹராமாகும்” என்று கூறிய அந்த ஈமான் ஆகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:** அல்லாஹுத் தஆலாதான் உதவிகள் கேட்கப்பட உரிமைமிக்க முழுமையானவனாவான் ஆவான். வேறு எவரும் அதற்கு உரியவர் ஆக முடியாது. இதன் மீதே திருக்குர்ஆன் அழுத்தம் கொடுத்துள்ளது. அதாவது, ‘உன்னையே வணங்குகின்றோம். உன்னை வணங்குவதற்காக உன்னிடமே உதவியும் நாடுகின்றோம்’ என்று கூறியுள்ளது. இதிலிருந்து உதவி நாடுவதற்கான முழு உரிமையுடையவன் அல்லாஹுத்தஆலாவே ஆவான் என்பது தெரிய வருகின்றது. இரண்டாவது படித்தரத்தில் இந்த உரிமை அல்லாஹ்வை உடையவர்களுக்கும் உண்மை அடியார்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, அவர்களுடைய துஆக்களாலும் உதவி கிடைக்கின்றது.

அன்னார் கூறினார்கள்: நாம் எந்த ஒரு விஷயத்தையும் நாமாகவே உருவாக்கிக் கொள்ளக் கூடாது. மாறாக, அல்லாஹுத்தஆலாவின் கூற்று மற்றும் ரஸூல் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டல்களுக்கு உள்ளேயே இருக்க வேண்டும். அதற்குப் பெயர்தான் சிராத்தே முஸ்தக்கீம் (நேரான வழி) என்பதாகும். மேலும், இந்த விஷயத்தை لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ என்பதில் இருந்தும் நன்கு புரிந்து கொள்ள முடியும். لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ என்பதன் முதல் பகுதியில் இருந்து மனிதனது நேசத்திற்குரியவனும் நாட்டத்திற்கு உரியவனுமாக அல்லாஹ்வே இருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது. மேலும், இரண்டாவது பகுதியில்

இருந்து முஹம்மது (ஸல்) அவர்களது தூதுத்துவத்தின் உண்மைத்துவம் வெளிப்படுத்தப்படுகிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:** எப்போது வரை لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ என்று கூறுபவர் தனது வாக்குறுதியை செயல் ரீதியாக நிரூபிக்கவில்லையோ அப்போது வரை அதன் உரிமை நிறைவேறுவதில்லை. மேலும், இதுவே ஈமானுக்கான நிபந்தனையாகும். அல்லாஹ்விற்கான உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்கான உரிமைகளின்படியும் செயல்படுவதும் அவசியமாகும். அப்போதுதான் மனிதன் لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ படி செயல்படுபவனாக ஆகின்றான். அப்போதுதான் அப்படிப்பட்ட மனிதன் இறைவன் முன் பொய்யனாக இருப்பதில்லை.

இந்த வார்த்தைகளின் இரண்டாவது பகுதி முன்னுதாரணத்திற்கானதாகும். நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) முன்மாதிரிகளுக்காக வருகின்றார்கள். மேலும், ரசூல் (ஸல்) அவர்கள் அனைத்தையும் உள்ளடக்கிய நபியாக திகழ்ந்தார்கள். அவர்களிடத்தில் அனைத்து நபிமார்களின் முன்மாதிரிகளும் ஒன்றிணைந்திருந்தன. அல்லாஹுத்தஆலாவின் கட்டளைகளின்படி சரியாக நடந்து கொண்டதும் சரியான விளக்கத்தை வழங்கியதும் அன்னாரே ஆவார்கள். மேலும், அதன்படி அமல் செய்து காண்பித்தார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:** சம்பிரதாயமான பைஅத் பலனை தருவதில்லை. தனது இருப்பை விட்டுவிட்டு, எவரிடத்தில் பைஅத் செய்துள்ளாரோ அவருடன் கலப்பற்ற முறையில் இணைந்து விடும்போதுதான், பைஅத் பலன் தருவதாக இருக்கும். (இல்லையெனில்) அதுவரை பைஅத்தில் பங்கு பெற்றவராக இருப்பது கடினமானதாகும். இயன்றவரை வழிமுறைகளிலும் வணக்க முறைகளிலும் தனது வழிகாட்டியை முழுவதுமாக பின்பற்றுபவராக ஆகி, காலையிலிருந்து மாலை வரை எந்த அளவு நாம் لَآ اِلٰہَ اِلَّا اللّٰہُ மீது அமல் செய்தோம் என்று கணக்கிட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

பிறகு கூறினார்கள்: முஸ்லிம்கள் கலிமா கூறிவிட்டு சோம்பேறிகளாகி விட வேண்டும் என்பது ஒருபோதும் எனது நோக்கம் அல்ல. மாறாக, தமது வியாபாரங்கள் மற்றும் பணிகளில் ஈடுபட்டிருக்கவும் வேண்டும். ஆனால், இறைவனுக்கான உரிமையை செலுத்துவதன் பாலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். அல்லாஹுத்தஆலாவின் மீதான அச்சத்தை வியாபாரத்தின் நேரத்திலும் கருத்தில் கொள்ள வேண்டும். எல்லா விவகாரங்களிலும் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். வாழ்வின் நோக்கமாக உலகம் இருக்கக் கூடாது. மார்க்கம் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். பிறகு உலகப் பணிகளும் மார்க்கமாகவே இருக்கும். கண்ணியத்திற்குரிய சஹாபிகளும் கடினத்திலும் கடினமான நேரத்திலும் இறைவனை விட்டு விடவில்லை. மேலும்,

இறைவனை விட்டு கவனமற்றவர்களாக இருக்கவில்லை. தொழுகையை அவர்கள் விட்டு விடவில்லை. மாறாக, துஆக்களைக் கொண்டு பயனடைந்தார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கலிமாவின் உண்மைத்துவம், அதன் பொருள் மற்றும் அதன்படி செயல்படுவது குறித்து கூறுகிறார்கள்:** திருக்குர்ஆனில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அல்லாஹுத்தஆலாவின் கட்டளைகளை செயல் ரீதியாக வெளிப்படுத்துவதே ஈமான் கொள்வதாகும். பிறகு, உண்மையில் செயல் ரீதியாக மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குவதாகும். ஆகவே, எவர் உண்மையான உள்ளத்துடன் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ வை ஏற்றுக் கொண்டாரோ அவர் சொர்க்கத்தில் நுழைந்து விட்டார். பிறகு, இறைவனைத் தவிர அவருக்கு வேறு எவரும் நேசத்திற்குரியவராக இருக்க முடியாது. அவர் அல்லாஹுத்தஆலாவின் திருப்தியை மட்டுமே நாடுபவராக இருக்கின்றார். துன்பங்களால் அவர் கவலை கொள்வதில்லை. ஏன் என்றால், அல்லாஹுத்தஆலா தனது நேசருக்கு உதவுவதற்கு உடனடியாக வந்தடைகின்றான் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்கிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அல்லாஹ்வுக்கான உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்கான உரிமைகளை நிறைவேற்றாத வரை لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்பதன் உண்மையான பொருளை அடைய முடியாது. ஒரு சகோதரர் மற்றவரின் உரிமையைப் பறிக்கின்றார். மேலும், காரணிகள் மீது எந்த அளவுக்கு நம்பிக்கை கொள்கின்றார் என்றால், இறைவனை ஒரு செயல் இழந்த உறுப்பாக கருதுகின்றார். மிகச் சிலரே ஏகத்துவத்தின் உண்மையான பொருளை புரிந்து கொண்டவர்களாவர். மனிதன் கலிமாவின் உண்மைத்துவத்தைத் தெரிந்து கொண்டால், மேலும், செயல் ரீதியாக அதன்படி நடக்க ஆரம்பித்து விட்டால், அவன் பெரும் முன்னேற்றம் அடைய முடியும். இறைவனின் விந்தையிலும் விந்தையான வல்லமைகளைக் காண முடியும். அனைத்து விதமான தீமைகளை விலக்கி விடும் போதுதான் உண்மையான ஏகத்துவவாதியாக ஆக முடியும். எனவே இந்த ரமலானில் நம்மில் ஒவ்வொருவரும், இந்தத் தீமைகளிலிருந்து தம்மைத் தாமே தூய்மைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ மீது உண்மையாக ஈமான் கொள்பவர்களாக இருக்க வேண்டும். ரமலானின் எஞ்சிய இந்த நாட்களில் நாம் துஆ மற்றும் முயற்சியால் நமக்குள் உள்ள அனைத்துத் தீமைகளையும் களைபவர்களாக ஆவதற்கு அல்லாஹுத்தஆலா நமக்கு நல் வாய்ப்பை வழங்குவானாக.

ரமலானின் இறுதி பத்து நாட்களில் நாம் லைலத்துல் கத்ரின் விஷயங்களைப் பேசுகின்றோம். உண்மையில், நாம் நமது ஒவ்வொரு சொல்லையும் செயலையும் அல்லாஹுத்தஆலாவின் கட்டளைகளுக்கு ஏற்ப ஆக்கிக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கின்ற போதுதான் லைலத்துல் கத்ர் கிடைக்கின்றது. அதன்படி செயல்படுபவர்களாக இருக்க வேண்டும். மேலும், அதனை நிரந்தரமாக நம் வாழ்வின் அங்கமாக ஆக்குபவர்களாக இருக்க வேண்டும். இதுவே லைலத்துல் கத்ரை அடைவதற்கான உண்மையான அடையாளம் ஆகும். நம்முடைய

உள்ளங்களில் என்ன புரட்சி உருவாகி உள்ளது என்பதுதான் உண்மையான அடையாளம் ஆகும்.

'நாம் கலப்பற்றவர்களாக மூன்று நாட்கள் துஆக்கள் செய்தால், அல்லாஹ்வின் சிறப்பான அருள் வெளிப்படலாம்' என்ற என்னுடைய இந்த விஷயத்தைக் கருத்தில் கொண்டவாறு சில ஜமாஅத்துகள் துஆக்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளையும் ஏற்படுத்தியுள்ளார்கள். மூன்று நாட்கள் துஆக்களில் ஈடுபட்டு பிறகு நமது பழைய வாழ்க்கை முறைப்படி சென்று விடலாம். மேலும், لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ உடைய உண்மையான நோக்கத்தை மறந்து விடலாம் என்பதற்காக ஒருவேளை நாம் இந்த மூன்று தினங்களை குறிப்பாக நிர்ணயித்துள்ளோம் என்றால், அல்லாஹுத்தஆலா நமது உள்ளங்களின் நிலையை அறிகின்றான்; நம்முடைய எண்ணங்களை அறிகின்றான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவனிடம் எந்த ஒரு விஷயமும் மறைவானதல்ல. அப்படிப்பட்ட நிலையில் அதற்கு எந்தப் பலனும் இருக்காது. ஆனால், அல்லாஹ்வைத் திருப்திபடுத்துவதற்காக இந்த நாட்களைக் கழிக்க நாடினால், பிறகு இந்த நாட்கள் எங்களுடைய வாழ்க்கையின் நிரந்தரமான அங்கமாக ஆகிவிட வேண்டும் என்ற வாக்குறுதியுடன் கழிக்க வேண்டும். பிறகு, எதிரிகள் நமக்கு ஏற்படுத்துகின்ற தொல்லைகளை அகற்றுவதற்காக இறைவன் தனது சிறப்பான உதவியையும் ஆதரவையும் வெளிப்படுத்துவான். இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனான அல்லாஹுத் தஆலாவின் வாக்குறுதி, அன்னாருக்கும் அன்னாருடைய ஜமாஅத்துக்கும் வெற்றியை வழங்குவான் என்பதாகும். விரைவில் அல்லது சில காலம் கழிந்து. எனினும், நாம் لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ என்பதன் உண்மைத்துவத்தைப் புரிந்து கொண்டு நமது வணக்கத்திற்குரியவனாகவும் நோக்கமாகவும் நேசத்திற்குரியவனாகவும் இறைவனை மட்டுமே ஆக்கிக் கொண்டால், மேலும், உலகை விட நமக்கு இறைவன் மீதான நேசம் மற்றும் அவனை அடைவது நமது நோக்கமாக இருக்குமேயென்றால், புரட்சி விரைவில் ஏற்படலாம். நாம் நமது நிலைமைகளில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்த உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறுதியில்,* 'இந்த நாட்களில் உலகின் பொதுவான அமைதிக்காகவும் உறுதிப்பாட்டிற்காகவும் துஆ செய்து கொண்டிருங்கள். அல்லாஹ் மனித குலத்தின் மீது கருணையையும் அருளையும் புரிவானாக' *என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)